முருகப்பெருமான் துணை

**மகான் அமர்நீதி நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

30.01.2023, திங்கட்கிழமை

1. ஞானலோகம் படைக்க வந்த
ஞானியே ஆறுமுக அரங்கனே
ஞானபண்டிதன் அவதாரமாகி
ஞானிகளையே உலகினில் உருவாக்க
2. உருவாக்க ஞானமருளும் அரசனே
உயர் ஞானியே உன்பெருமை கூறி
உறுதிபட அனுகூல ஆசிதனை
உண்மைபட சுபகிருது கலை திங்கள்
3. திங்களிலே மூவையோர்திகதி சோமவாரம்
(சுபகிருது வருடம் தை மாதம் 16 ம் நாள் 30.01.2023, திங்கட்கிழமை)
தேசிகனுக்கு அமர்நீதி நாயனாரும்
ஓங்காரம்பட உலகம் தேறிட
ஓதிடுவேன் உலகோர்க்கு அரங்கன் ஞானமதை
4. ஞானமாம் சன்மார்க்க நெறி
நம்பிக்கைபட மக்கள் ஏற்க
ஞான உலகமாக மாறுவது உறுதி
நம்பகமுற நாளும் பூசை
5. பூசைதனை ஞானத்தலைவன்
புண்ணியமிக்க ஞானிகள்பேரில்
நேசம்பட நித்தம் செய்துமே
நீதிநெறிபட வாழ்வு நடத்த
6. நடத்தவே தன்னை சுத்திசெய்ய
நமனை வெல்ல தயவு நிறைந்த
இடர் போக்கும் அன்னதான சேவை
ஏற்று மக்கள் உலகம்தனில்
7. தன்னிலே கடமையாகச் செய்து
தவராஜன் வழிகாட்டலென
மண்ணுலகில் விரிவாகச் செய்திட
மக்களுக்கு மகத்துவம் கூடி
8. கூடியே ஞானவான்களாகவே
குவலயத்தில் தேற்றம் ஆகி
நாடிடும் ஞானிகள் ஆசிபட
ஞானிகளாக உருவெடுக்கும் வண்ணம்
9. வண்ணமுடன் அரங்கன் ஆசிபட
வாய்ப்புகள் வந்தடைய நேரும்
எண்ணம் யாவும் உயர்ந்து
எல்லாம் குருவருள் திருவருள் என

10. திருவருளென சரணாகதி பெருகிட
தெய்வநிலை அடைதல் கண்டு
முருகப் பெருமான் வெளிப்பாடு
முழுமைபட உலகம் அடைந்து

11. அடைந்து ஞானத்தலைமை வந்து
அகிலம் ஞானலோகம் ஆகும்
தடையற அனைவரும் ஞானிகளாகி
தரணியில் ஞான ஆட்சியாக மலரும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–